*Kalanjiyam International Journal of Tamil Studies* ISSN: 2456-5148 (Online)
*An international, peer-reviewed quarterly academic research journal* www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p297-308** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper*

# மணிமேகலையில் பௌத்த மெய்யியல்

## Buddhist Philosophy in Manimekalai

**செ.செண்பகம்,**

ஆய்வாளர், முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத் துறை, அரசு கலைக் கல்லூரி, (நிலை – 1), (பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுப் பெற்றது), அரியலூர் - 621 713. அலைபேசி :7868939484

**Senbagam S,**

*Researcher, Full-Time Ph.D. Research Scholar, Department of Tamil Studies, Government Arts College (Grade - 1), (Affiliated to Bharathidasan University), Ariyalur – 621, Email: senbatamil250@gmail.com .*

**முனைவர் ம.இளையராஜா,**

நெறியாளர், இணைப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை, அரசு கலைக் கல்லூரி, (நிலை – 1), (பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுப் பெற்றது), அரியலூர் - 621 713. அலைபேசி :9842057123.

**Dr. Ilayaraja M*,**

*Associate Professor, Research Guide Department of Tamil Research, Government Arts College, (Grade - I), (Affiliated to Bharathidasan University), Ariyalur - 621 713. Email: mathiilayaraja@gmail.com.*

*Article history*
Received: 31-07-2026
Revised: 31-07-2026
Accepted: 01-07-2026
**Published: 08-08-2026**

*Corresponding Author Email:
*senbatamil250@gmail.com*

**Abstract:** Seethalai Sathanar's Manimekalai stands as a unique philosophical encyclopedia in the history of Tamil literature, shaped by an egalitarian perspective and a Buddhist foundation. This article analyzes—from both literary and logical standpoints—the epic's core Buddhist tenets, including Anitya (impermanence), Anatma (non-self), Dukkha (suffering), Karma (action and consequence), and Nirvana (liberation), while illustrating their practical application through the protagonist's renunciation of worldly affluence for an ascetic life. Furthermore, it explores profound concepts presented by characters such as Sathanar and Aravana Adigal—including the Four Noble Truths, the Eightfold Path, the Five Aggregates (Pancha Skandhas), and Dependent Origination (Pratityasamutpada)—ultimately demonstrating how Buddhism integrates individual spiritual liberation with social welfare through the alleviation of hunger, symbolized by the Amudhasurabi (the inexhaustible alms bowl).

**Keywords:** *Buddhist Philosophy - Four Noble Truths - Impermanence (Anicca) - Non-self (Anatta) - Law of Karma - Five Aggregates (Skandhas) - Compassion (Karuna).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சமத்துவ நோக்கோடும் பௌத்த மெய்யியல் பின்புலத்தோடும் உருவான தனித்துவமான தத்துவக் கலைக்களஞ்சியம் சீத்தலைச் சாத்தனாரின் 'மணிமேகலை' ஆகும். இக்கட்டுரை, மணிமேகலைக் காப்பியத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள பௌத்த மெய்யியல் கோட்பாடுகளான அநித்தியம், அனாத்மா, துக்கம், கர்மவினை மற்றும் நிர்வாணம் ஆகியவற்றை இலக்கிய மற்றும் தர்க்கவியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்கின்றது. காப்பிய நாயகி உலகியல் இன்பங்களையும், செல்வச் செழிப்பையும் துறந்து துறவறப் பாதையைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பௌத்த மெய்யியலின் நடைமுறை வடிவம் எவ்வாறு சாத்தியமாகின்றது என்பதை இவ்வாய்வு விளக்குகின்றது. மேலும், காப்பிய மாந்தர்களான சாத்தனாரும், அறவண அடிகளும் முன்வைக்கும் நான்கு ஆரிய சத்தியங்கள், அஷ்டாங்க மார்க்கம், பஞ்ச ஸ்கந்தங்கள் மற்றும் சார்புற்றோன்றல் (பிறவிச்சுழற்சி) ஆகிய தத்துவங்களின் ஆழத்தை இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது. இறுதியாக, அமுதசுரபி வழியிலான பசிப்பிணி மருத்துவத்தின் மூலம், தனிமனித ஆன்ம விடுதலையோடு சமூகநலக் கோட்பாட்டையும் பௌத்தம் எவ்வாறு ஒருங்கிணைக்கிறது என்பதைத் தத்துவார்த்த ரீதியாக இக்கட்டுரை நிறுவுகின்றது.

**திறவுச் சொற்கள்**

மணிமேகலை - பௌத்த மெய்யியல் - நான்கு ஆரிய சத்தியங்கள் - அநித்தியம் அனாத்மா - கர்மவிதி - பஞ்ச ஸ்கந்தங்கள் - கருணை - நிர்வாணம்

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஐம்பெருங்காப்பியங்கள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. அவற்றில் மணிமேகலை சமயத் தத்துவத்தை மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட தனித்துவமான காப்பியமாகும். அவற்றில் பௌத்த மெய்யியல் கோட்பாடுகளான அனித்தியம், துக்கம், கர்மவிதி, அனாத்மா, நிர்வாணம் உள்ளிட்ட கூறுகள் காப்பியம் எங்கிலும் பரவிவுள்ளது. மணிமேகலை உலக வாழ்க்கையின் நிலையாமையையும், ஆசை-பற்றுகளால் உண்டாகும் துக்க நிலையையும் உணர்த்தும் வகையில் அமையப்பெற்றுள்ளது. நாயகியான மணிமேகலை மன்னர் வாழ்க்கையின் இன்பங்களையும், செல்வ வளங்களையும் விட்டு நீங்கித் துறவறப் பாதையைத் தேர்ந்தெடுப்பது பௌத்த மெய்யியலின் நடைமுறை வடிவமாகக் கருதப்படுகின்றது. இந்நிகழ்வு துக்க நிவாரணத்திற்கான மார்க்கமாக அறவழியை எடுத்துரைக்கும் புத்த சிந்தனையுடன் ஒருங்கே அமையப்பெற்றுள்ளது. அமுதசுரபி நிகழ்வின் மூலம் ஈகை, சமத்துவம், கருணை ஆகியவை உயர்ந்த அறமாகச் சித்தரிக்கப்படுகின்றன. இதனால் மணிமேகலை தனிப்பட்ட ஆன்ம விடுதலையை மட்டுமல்லாது சமூகநலக் கோட்பாட்டையும் வலியுறுத்தும் இலக்கியமாக சுட்டப்பெறுகின்றது. இவ்வியல் மணிமேகலையில் வெளிப்படும் பௌத்த மெய்யியல் கோட்பாடுகளை இலக்கிய

அடிப்படையில் ஆராய்ந்து, அவை எவ்வாறு தத்துவ ஆழத்தை உருவாக்குகின்றன என்பதைக் கருத்தாய்வு செய்ய முனைகின்றது.

**பௌத்த மெய்யியல் கோட்பாட்டு விளக்கம்**

பௌத்த மெய்யியல் என்பது உலகம், உயிர், துன்பம் மற்றும் விடுதலை பற்றிய தத்துவக் கருத்துக்களை விளக்கும் சிந்தனை முறை ஆகும். இதன் அடிப்படையில் கௌதமபுத்தர் அவர்களின் போதனைகளில் நிலைகொண்டுள்ளது. பௌத்த தத்துவம் உலக வாழ்க்கையை நிலையற்றதும் துக்கமயமுமான ஒன்றாகக் காண்கிறது. அதிலிருந்து விடுதலை பெறுவதற்கான அறவழியை முன்னிறுத்துகின்றது.

**நான்கு ஆரிய சத்தியங்கள்**

பௌத்த சமயத்தின் முதன்மை நெறிமுறைகளைப் பேசும் மணிமேகலைக் காப்பியத்தில் புத்தர் அருளிய நான்கு ஆரிய சத்தியங்கள் (துக்கம், துக்கத்தின் காரணம், துக்கத் தடுப்பு, துக்கத் தடுப்புக்கான வழி) மிக முக்கியமான தத்துவப் பின்னணியாக விளங்குகின்றன. பிறப்பு, முதுமை, மரணம், சோகம், மனச்சஞ்சலம், விரும்பியதை அடைய முடியாமை ஆகியவை அனைத்தும் துக்கத்தின் பல்வேறு வடிவங்களாகும்.

மனிதனின் உடலும் மனமும் சார்ந்த ஐந்து கந்தங்களே (உருவம், வேதனை, குறிப்பு/ பெயர், பாவனை / சமஸ்காரம், விஞ்ஞானம்) இத்துக்கங்களின் பிறப்பிடமாக அமைகின்றன. நிலம், நீர், தீ, காற்று எனும் நான்கு பூதங்களால் ஆன ‘உருவம்’ முதல் மனித உணர்வுகள் வரை அனைத்தும் துக்கத்திற்கு வழிவகுக்கும் தன்மையுடையவை என்பதை எடுத்துரைக்கும் மணிமேகலை, இத்துக்க சுழற்சியிலிருந்து விடுபட்டு நிலையான அறவழியை அடைவதற்கான பௌத்த தத்துவப் பார்வையை அடிப்படையாகக் கொண்டு தன் அறக்கருத்துகளை முன்வைக்கின்றது.

பௌத்தத்தின் நான்கு ஆரிய சத்தியங்களை மணிமேகலை வெறும் சமயக் கோட்பாடாக மட்டும் முன்வைக்கவில்லை. மாறாக, மனித மனதின் உளவியல் சிக்கல்களுக்கும் வாழ்க்கைப் போராட்டங்களுக்கும் தீர்வு தரும் ‘அறிவியல் பூர்வமான மருத்துவ அணுகுமுறையாகவே’ சாத்தனார் இதனைக் கட்டமைக்கின்றார்.

- **நோயறிதல் :** மனித வாழ்வில் துன்பம் உண்டு என்பதை உணர்வது (துக்கம்).
- **காரணம் அறிதல் :** அதற்கான மூலம் “ஆசை” மற்றும் “பற்று” என்பதைத் துல்லியமாகக் கண்டறிவது (துக்கக் காரணம்).
- **குணப்படுத்தலை அறிதல் :** அத்துன்பத்தை முற்றிலுமாகக் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையைப் பெறுவது (துக்க நிவாரணம்).
- **சிகிச்சை அளித்தல்:** அதற்கான அறவழியை நடைமுறைப்படுத்துவது (நிவாரண மார்க்கம் / அஷ்டாங்க மார்க்கம்).

பெரும்பாலான தத்துவங்கள் வாழ்க்கையின் துன்பத்தைக் கண்டு விரக்தியடைந்து உலகியலை விட்டு ஓடி ஒளிவதைப் போதிக்கும் சூழலில், மணிமேகலை முன்வைக்கும் நான்கு ஆரிய சத்தியங்கள் துன்பத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து, அதை எதிர்கொண்டு, அறிவொளி மூலம் வெல்லும் நடைமுறை வாழ்வியல் சாத்தியத்தை மனிதகுலத்திற்குப் புகட்டுகின்றது. பௌத்த மெய்யியலின் அடித்தளம் நான்கு ஆரிய சத்தியங்கள் ஆகும். இதனை,

**"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்**
**பிறவார் உறுவது பெரும்பேரின்பம்**
**பற்றின் வருவது முன்னது; பின்னது**
**அற்றோர் உறுவது"[1]**

**(மணி. 2: 64-67)**

என்று மணிமேகலை சுட்டுகின்றது. அஃதாவது பிறப்பு என்பது துன்பம்; பிறவாமை என்பது பேரின்பம் (நிர்வாணம்). பற்றினால் துன்பம் உண்டாகிறது அப்பற்றை அறுப்பதன் மூலம் அந்தப் பேரின்பத்தை அடையலாம் என்பதே இதன் பொருளாக காணமுடிகின்றது. அதில்

• **துக்கம் என்பது -** உலக வாழ்க்கை துன்பம் மயத்தை சுட்டுகின்றது.

• **துக்கத்தின் காரணத்தை -** ஆசை பற்றில் உள்ளது என்பதை மையமாக உள்ளது.

• **துக்க நிவாரணத்திற்கு -** ஆசை நீக்கப்பட வேண்டும் என்று சுட்டுகின்றது

• **நிவாரண மார்க்கம் என்பது –** அஷ்டாங்க மார்க்கம் அதாவது எண்வகை வழிகளைச் சுட்டுகின்றது.

இந்த சத்தியங்கள் மனித வாழ்வை உணர்வியல் அடிப்படையிலும ஆன்மீக அடிப்படையிலும் புரிந்துகொள்ள வழிகாட்டுகின்றன.

**அனித்தியம் (நிலையாமை)**

பௌத்த மெய்யியலில் உலகில் தோன்றிய அனைத்தும் நிலையற்றது என்பதே "அனித்தியம்". பொருள், உடல், உணர்வு, எண்ணம் ஆகிய அனைத்தும் காலப்போக்கில் மாறும். இதனால் நிலையான இன்பம் அல்லது "ஆத்மா" என்பது பௌத்தக் கருத்தில் இல்லை. அனித்திய உணர்வே மனிதனைப் பற்றற்ற நிலைக்கு அழைத்துச் செல்கிறது. இதனை,

**"பிறந்தது அழியும்; உருவானது கெடும்;**
**பெறப்படுபவது ஒன்றும் இல்லை"[2]**

**மணி : 27 ( 78 -79 )**

என்று சீத்தலைச் சாத்தனார் சுட்டுகின்றார். அஃதாவது உலகில் தோன்றிய அனைத்தும் அழிவுக்குரியது என்பதை இவ்வடிகள் வலியுறுத்துகின்றன. இஃது பௌத்த தத்துவத்தின் "அனித்தியம்" என்ற கோட்பாட்டை வெளிப்படுத்துகின்றது. நிலையில்லாத உலக வாழ்க்கையை

உணர்வதே ஞானத்தின் தொடக்கமாக பௌத்தம் கருதுகின்றது. மணிமேகலை முன்வைக்கும் அநித்தியம் மற்றும் அனாத்மாக் கோட்பாடுகள் வெறும் தத்துவ விவாதமன்றி, மனிதனின் அகந்தையை உடைக்கும் உளவியல் அறிவியலாகவே திகழ்கின்றன. நவீனச் சமூகச் சிக்கல்களுக்கும் பேராசைக்கும் மூலக்காரணமான "நான்," "எனது" எனும் சுயநல உணர்வை, பஞ்ச ஸ்கந்தங்களின் தற்காலிகக் கூட்டமைப்பே மனிதன் என்னும் காரண-காரியப் புரிதல் தகர்த்தெரிகின்றது. நிலையான ஆன்மா இல்லை என்பதை உணரும்போது அகந்தை அழிந்து, அனைத்து உயிர்களையும் சமமாக நோக்கும் அகண்ட கருணையும் உலகளாவிய சமத்துவ உணர்வும் இயல்பாக மலர்கின்றன என்பதை அறியமுடிகின்றது.

**துக்கம் மற்றும் கர்மவிதி**

மணிமேகலை கூறும் கர்மக் கோட்பாடு மனிதனை "விதி" என்று முடங்கிப் போவதிலோ தள்ளவில்லை. மாறாக, உன் தற்போதைய நிலைக்கு உன் கடந்த காலச் செயல்களே காரணம். உன் எதிர்காலத்தை உன் தற்போதைய நற்செயல்களால் மாற்ற முடியும் என்ற மனிதனின் சுய பொறுப்புணர்வை விழிப்படையச் செய்கின்றது. உலக வாழ்க்கை முழுமையாக இன்ப மயமன்று, அது துன்பத்தின் அலைகளால் நிரம்பியுள்ளது. பிறப்பு, முதுமை, நோய், மரணம் ஆகியவை தவிர்க்க முடியாதவை என்பதை,

**"செய்வினைத் திதமும் நன்றூம் துணையாகி**
**அவ்வினைப் பயனே உயிர்க்கு உண்டு"[3]**

**மணி : 24 ( 127 -128 )**

என்று சுட்டப்பெறுகின்றது. அஃதாவது மனிதன் செய்கின்ற செயல்களே அவனைத் தொடர்ந்து பயணிக்கும் என்பதே கர்மவிதி. இக்கருத்து பௌத்த சமயத்தின் அடிப்படைத் தத்துவமாகும். நன்மை தீமை இரண்டிற்கும் தக்க விளைவு உண்டு என்பதை வலியுறுத்துகின்றது.

**அனாத்மா (ஆத்மா இல்லாமை)**

பௌத்த மெய்யியலின் முதன்மை கோட்பாடுகளில் ஒன்றான அனாத்மா (நிலையான ஆத்மா இல்லாமை) ஆகும். இக்கோட்பாட்டை மணிமேகலையில் அறவண அடிகள் வழங்கும் உபதேசங்களில் தெளிவாக வெளிப்படுத்துமிடத்து. இதனை,

**"உடம்பொடு உயிரிடை ஓடியாது ஒன்றில்லை**
**ஐந்தினை கூடிய அமைப்பே மனிதன்"[4]**

**மணி : 30 (190 -191)**

என்பர். மனிதன் தனித்த "நான்" என்ற நிலையான ஆத்மா அல்ல. ரூபம் (உடல்), வேதனை (உணர்வு), சஞ்ஞை (அறிதல்), சங்காரம் (மனச்சாய்வு), விஞ்ஞானம் (அறிவு) எனும் ஐந்துகூறுகளின்

(பஞ்சஸ்கந்தங்கள்) சேர்க்கையே மனிதன் என்பதைக் குறிக்கிறது. ஐந்தொகுதியை (பஞ்சஸ்கந்தம்) சுட்டுமிடத்து.

**"ரூபம் வேதனை சஞ்ஞை சங்காரம்**
**விஞ்ஞானம் என்னும் ஐந்தினும் ஆனது"** [5]

**மணி : 30 (190 -191)**

என்று மணிமேகலை பாடலடியில் அறவண அடிகள் கூறுகின்றார். நான் என்ற தனித்த நிலை மாயை. காரணம்-விளைவு தொடர்பின் வளர்ச்சியே உயிர் என்பதைக் காட்டுகின்றது. இதன் மூலம் நிலையான ஆத்மா இல்லை என்பதை நிலை நிறுத்துகின்றது. **"நானெனும் எண்ணம் நாசமாம்"** காரணக் கூட்டு நினைவே உயிர் என்று மணிமேகலையில் அறவண அடிகள் உலகிற்கு எடுத்துரைக்கின்றார். யாதும் தனித்த "நான்" இல்லை காரணக் கூட்டமே உயிரெனப்படும்" என்பதனை,

**"ஒன்றெனும் உணர்ச்சியின் ஒன்றுதல் இன்றே"**[6]

**மணி : காதை 27 (195)**

என்று சுட்டுவர். நான் என்ற எண்ணத்தை விட்டொழித்தாலே பற்றின்மை ஏற்படும் துன்பமும் குறையும், மேலும் நிர்வாண நிலை அடைய முடியும் என்பதை மணிமேகலை வலியுறுத்துகின்றது.

**நிலையற்ற தன்மை - ஆத்ம மறுப்பு**

புத்தரின் தத்துவ தரிசனத்தில் பொருட்களின் அழிவுடைமை என்பது தவிர்க்க முடியாத விதியாகும். "ஒன்றின் அழிவுக்குப் பின் மற்றொன்றின் தோற்றம்" நிகழ்கிறது என்றும், ஒரு பொருள் தோன்றுவதற்கு முந்தைய வினாடி அது மறைந்துகொண்டே இருக்கிறது என்றும் பௌத்தம் விளக்குகிறது. இந்நிலையை நாகார்ஜுனர் 'பிரத்யய் ஸமுத்பாதம்' (காரிய-காரணத் தொடர்பு) மற்றும் 'சூனியவாதம்' வழியே எடுத்துரைக்கிறார்.

இக்கொள்கையை மணிமேகலைக் காப்பியமும் தழுவி நின்று, "நான்" என்ற எண்ணத்தை விட்டொழித்தாலே பற்றின்மை ஏற்பட்டுத் துன்பம் குறையும் என்றும், நிர்வாண நிலையை அடைய முடியும் என்றும் வலியுறுத்துகிறது **(மணிமேகலை 27:195).** மனிதனின் உடலும் உணர்வும் இடைவிடாது மாறக்கூடியவை; மாறுகின்ற ஒன்றில் நிலையான 'ஆத்மா' என்ற ஒன்று இருக்க முடியாது. உருவமும் உணர்வும் மாறும் இயல்புடைய மனித தொடர்ச்சியே வாழ்க்கையாகும். இதனை, மணிமேகலையில் "நிலையற்ற தன்மை - ஆத்ம மறுப்பு" என்ற தத்துவ விளக்கத்திற்கு,

**"பிறந்தோர்ப் பெறாஅர் உற்றோர்ப் பிரியார்**
**உணர்ந்தோர் உணர்வின் ஓங்கியோர் இல்லை**
**பிறந்தோர் இறத்தலும் இறந்தோர் பிறத்தலும்**
**உறங்கலும் விழித்தலும் போன்றது உலகத்து"**[7] **- (மணிமேகலை 6:96-99)**

எனும் பாடல் வழி அறியமுடிகின்றது. பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் மீண்டும் பிறப்பதும், தூங்குவதும், விழிப்பதும் போன்ற இயல்பான நிலையற்ற ஒன்றாகும். இதனை,

**“பிறந்தன இறக்கும்; இறப்பன பிறக்கும்;**

**தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும்;”[8]**

**-(மணிமேகலை 11:71-72)**

என்பர். உலகில் தோன்றும் அனைத்தும் அழியும், அழியும் அனைத்தும் மீண்டும் மாறும் என்னும் பௌத்தத்தின் காரிய-காரணத் தொடர் நெறியை உணர்த்தும். இக்கருத்தை,

**"இளமையும் நிலையாது; யாக்கையும் நிலையாது;**

**வளப்பமும் நிலையாது"[9]**

**- (மணிமேகலை 22:135-136)**

என்று மணிமேகலை பாடலடியில் அறவண அடிகள் கூறுகின்றார். இளமை, உடல், செல்வம் ஆகிய அனைத்தும் அழியும் இயல்புடையவை; எனவே இதில் நிலையான ஆன்மா என்று எதுவும் இல்லை என்பதை உணர்த்துகிறது. மேலும், இவ்வரிகள் உலகின் அனைத்துப் பொருள்களும் மாற்றமடைந்து அழிவதற்கே உரியவை என்பதைச் சுட்டுகின்றது. உடலும் உணர்வுகளும் எண்ணங்களும் நிலையற்றவை என்றால், அவற்றில் நிலையான ஆத்மா என்ற கருத்தை பௌத்தம் வழிமொழிகின்றது. மணிமேகலையில் அறவண அடிகள் வழங்கும் தத்துவ உபதேசங்களில் இச்சிந்தனையும் வெளிப்படுகின்றது.

**பிறவிச்சுழற்சி**

மனிதன் செய்கின்ற கர்மங்களின் விளைவாக அவன் உலகில் மீண்டும் பிறக்கின்றான். இச்சுழற்சி அவன் அறியாமையின் விளைவாகும். இதனை,

**“பிறப்பும் முதுமையும் பிணியும்**

**இறப்பும் அறியாமை மூலமாம்"[10]**

**மணி : 27(158-159)**

என்று சுட்டுவர். இவ்வரிகள் உலக வாழ்க்கையின் நிலையற்ற தன்மையையும், பிறவிச்சுழற்சியின் தொடர்ச்சியையும் சுட்டுகின்றன. உயிரின் துன்பம், நோய், மரணம் ஆகியவை அறியாமை காரணமாக நிகழ்கிறது. மேலும், மணிமேகலையில் பிறவிச்சுழற்சியை முறிக்க ஞானம் மற்றும் துறவற வாழ்வு முதன்மையான வழியாகச் சுட்டப்பெறுகிறது. இதனை,

**“ஆசை நீக்கினால் பிறவிச்சுழற்சி குறையும்;**

**அறிதலின் வாயில் ஆன்மா விடுதலை பெறும்" [11]**

**மணி : 30 (222-223)**

என்பர் சீத்தலைச்சாத்தனார். அஃதாவது ஆசை (தண்ஹா) நீக்கப்படாமல் இருக்கும் போது உயிர் மீண்டும் பிறப்புச் சுழற்சியில் சிக்கிவிடும். ஞானம் (புத்தி) மற்றும் துறவற வாழ்க்கை உயிரைப் பிறவி-மரணச் சுழற்சியிலிருந்து விடுவிக்கும். இதுவே நிர்வாணம் எனும் பரம நிலையின் அடிப்படையாகும். மேலும், மனிதன் தான் மீண்டும் பிறக்கின்றான் என்பதை மணிமேகலை பௌத்தக் கோட்பாடுகளில் விளக்குகின்றது. இதனை,

**“கர்மம் செயல் செய்தால், அதன் விளைவு**
**மீண்டும் பிறவியைக் கைப்பற்றும்; அறிவுடையோர்**
**அதனை அறிந்தால் சுழற்சியிலிருந்து விடுபடுவர்"[12]**

**மணி : 27( 210-212)**

எனும் பாடல் வழி அறியமுடிகின்றது. அவற்றில், பிறவிச்சுழற்சி என்பது மனிதன் ஆசை மற்றும் அறியாமையின் அடிப்படையில் சிக்கிக்கொண்ட வாழ்வின் தொடர்ச்சியாகத் அமைகின்றது. உயிரின் விடுதலைக்கு ஞானம், அறிவு மற்றும் துறவற வாழ்க்கை தேவையாகிறது என்பதையும் உணர்த்துகின்றது.

**கருணை மற்றும் அறவியல்**

பௌத்த மெய்யியலில் கருணை என்பது முக்கியமான அறநெறியாகக் கருதப்படுகின்றது. அனைத்து உயிர்களிடத்தும் சமமான இரக்கம் கொண்டிருப்பதே புத்த சமயத்தின் அடிப்படை நோக்கமாகும். மனிதன் தனக்காக மட்டுமல்லாமல், அனைத்து உயிர்களின் துன்பத்தையும் உணர்ந்து அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணமே கருணையின் அடிப்படை இயங்கியலாகும். மணிமேகலையில் உயிர்களுக்கு உணவு வழங்குதல், பசி தீர்த்தல், துன்பம் நீக்குதல் உள்ளிட்ட செயல்கள் அறவழிகளாகச் சுட்டப்படுகின்றன. மணிமேகலைக்குக் கிடைத்த அமுதசுரபி பாத்திரம் அதற்கான அடையாளமாக விளங்குகின்றது. அது பசித்தவர்களுக்கு உணவு வழங்கும் கருணை நெறியை எடுத்துரைக்கின்றது. இக்கருத்தை,

**“பசிப்பிணி தீர்ப்பது பரம அறமென**
**உயிர்க்கு ஆதி செய்யின்**
**உயர்ந்தோன் ஆகிய" [13] மணி : 22 (58-60)**

எனும் அடிகள் உயிர்களின் பசியை நீக்குவது உயரிய அறமாகும் என்பதை மணிமேகலை நமக்கு உணர்த்துகின்றன. மனித வாழ்வில் கருணை மற்றும் பரிவு இல்லாமல் அறநெறியை நிலைநிறுத்த முடியாது என்பதையும் இவை வலியுறுத்துகின்றன. மேலும், பௌத்த சிந்தனையில் எல்லா உயிர்களும் சமம் என்பதையும் மணிமேகலை எடுத்துரைக்கிறது. இதனை,

**“அறம் செய் திரும்பு, உயிர்க்கு இன்பம் தருதல்**
**துறவோரின் தலையாய தொழிலாகும்"[14] மணி : 30 (230-231)**

எனும் பாடலடிகள் வழி கருணை, தானம், உயிர்க்கு உதவி செய்வது போன்றவை மனிதனின் உயர்ந்த வாழ்க்கை நோக்கமாகக் கருதப்படுகிறது. பௌத்த அறவியல் மனிதனை விட்டுப் பிறர் நலத்தை நோக்கி வாழச் செய்கின்றது.

**நிர்வாணம்**

பௌத்த சமயத்தின் மிகச்சிறந்த அறநெறிகளையும் தத்துவங்களையும் எடுத்துரைக்கும் தமிழ்க் காப்பியம் மணிமேகலையாகும். பௌத்தத் தத்துவத்தில் 'நிர்வாணம்' என்னும் சொல் 'அணைதல்' என்னும் பொருளில் எடுத்தாளப்படுகிறது. ஒரு விளக்கில் எண்ணெயும் திரியும் தீர்ந்து போகும்போது சுடர் தானே அணைந்துவிடுவதைப் போலவும், விறகுகள் எரிந்து முடிந்தபின் நெருப்பு தணிந்துவிடுவதைப் போலவும், மனிதனின் மன அழுக்குகளான காமம், வெகுளி, மயக்கம் மற்றும் அகங்காரம் அழியும்போது பிறப்பு-இறப்பு என்னும் சுழற்சியும் அணைந்து விடுகிறது. மணிமேகலை காப்பியமும் இத்தகைய பிறவிப் பெருங்கடலை நீந்தி, பற்றுகளை அறுத்து, 'பிறப்பறுத்தல்' அல்லது 'வீடுபேறு' அடைதலையே வாழ்க்கையின் பரம இலட்சியமாகப் பறைசாற்றுகிறது. பிறப்பில்லாததும், கடந்துபோன காலப் பற்றுகளற்றதும், வினைகளின் பிடியிலிருந்து விடுபட்டதுமான இத்தகு சாந்த நிலையை (நிர்வாணத்தை) அடைவதே மணிமேகலையின் துறவறப் பாதையின் முதன்மை நோக்கமாகும்.

ஆசை நீக்கமே நிர்வாணத்தின் அடிப்படை. நிர்வாணம் என்பது துன்ப நிவாரண நிலை கர்மச் சுழற்சியின் முடிவாகவும், பிறவிச் சுழற்சியிலிருந்து முழுமையான விடுதலையாகவும் கருதப்படுகின்றது. இதனை,

**“ஆசை அறுத்து அறிவொளி பெற்றார்**
**பிறவி அறுத்து அமைதி அடைவர்"** [15]

மணி : 30(220-221)

என்று சுட்டப்பெறுகின்றது. பௌத்த மெய்யியலின்படி, உயிர் ஆசை (தண்ஹா), பற்றுதல், அறியாமை ஆகியவற்றால் கட்டுப்பட்டு மனைவாழ்க்கை சுழற்சியில் மனம் உழல்கின்றது. இவ்விருப்பங்கள் நீங்காத வரை பிறப்பு-இறப்பு தொடர்கின்றது. மணிமேகலை உலக இன்பங்களை ஆசையின் வெளிப்பாடு என்கிறது. ஆகவே, ஆசையை முற்றிலும் ஒழித்தாலே நிர்வாண நிலையை அடைய முடியும். மணிமேகலையில் நிர்வாணம் வெறும் தத்துவக் கருத்தாக மட்டும் அல்லாது, நடைமுறை வாழ்க்கை வழியாகக் காட்டப்படுகிறது. மணிமேகலை ஆதி இன்பங்களைத் துறந்து துறவற வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பது, ஆசை நீக்கத்தின் நடைமுறை வெளிப்பாடாகும். மேலும், நிர்வாணம் ஞானத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது. அறியாமை நீங்கி அறிவொளி விளங்கின் பிறப்பின்மை பெறுதலை உறுதிசெய்கின்றது.

இவ்வகையில் ஞானம் (புத்தி) மூலம் அறியாமை நீங்கும்போது உயிர் பிறவிச்சுழற்சியிலிருந்து விடுபடும் என்பதை வலியுறுத்துகின்றன. அதனால், ஆசை நீக்கம், அறியாமை அகற்றுதல், ஞானத்தை பெறுதல் எனும் முந்நிலையை அடைந்தால் தான் நிர்வாண நிலையை பெற வழிவகுக்கும் அடிப்படையாகும். நிர்வாணம் என்பது துன்பமற்ற நிலை, பற்றின்மையின் உயரிய நிலை, ஆன்மீக வழியிலான அமைதி எனும் இறுதி நிலையாகும். ஆகவே, மணிமேகலை சுட்டும் நிர்வாணத்தை மனித வாழ்வின் இறுதி இலக்காகவும், அறநெறி வாழ்வின் உயர்நிலையாகவும் எடுத்தியம்புகின்றது.

**முடிவுரை**

இந்தியத் தத்துவச் சூழலில் ஆன்ம விடுதலை என்பதைத் தனிமனிதனின் ஆன்மீக அடைவாக மட்டுமே பெரும்பான்மையான சமயங்கள் பார்த்த நிலையில், மணிமேகலை அதனைச் சமூகப் பண்போடு இணைத்துக் காட்டுகின்றது. **“பசிப்பிணி தீர்த்தல்”** எனும் மாபெரும் சமூக அறத்தை அமுதசுரபியின் மூலம் முதன்மைப்படுத்தி, தனிமனிதத் துறவும் சமூகநலனும் நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதையும் ஆசை, அறியாமை ஆகியவற்றை அகற்றி அறிவொளி (ஞானம்) பெறுவதன் மூலமே பிறவிச் சுழற்சியிலிருந்து விடுதலை பெற்று “நிர்வாணம்” எனும் பரம சாந்தியை அடைய முடியும் **என்பதையும்** இக்கட்டுரை நிறுவுகின்றது. மனித குலத்தின் துன்பங்களுக்குத் தீர்வாக மணிமேகலை முன்வைக்கும் அருள், கருணை, பசிப்பிணி நீக்கம் ஆகியக் கோட்பாடுகள், காப்பிய காலத்திற்கு மட்டுமன்றி இன்றைய நவீன மனிதகுலச் சிக்கல்களுக்கும் மிகச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றன.

வஞ்சி மாநகரில் மணிமேகலை சந்தித்த ஆசீவகம், சாங்கியம், சமணம், பூதவாதம், சைவம் மற்றும் வைணவம் போன்ற புறச்சமயத் தத்துவங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் 'நிலையற்ற உலகை நிலையானது' என்று வாதிட்டன அல்லது 'நிலையான ஆன்மா' என்ற கற்பிதத்தை நிலைநிறுத்த முயன்றன. இவற்றுக்கு முற்றிலும் மாறாக, பௌத்த தத்துவம் முன்வைக்கும் ‘அநித்தியம்’ (நிலையற்ற தன்மை) மற்றும் ‘அனாத்மா’ (நிலையான ஆன்மா இன்மை) ஆகிய கொள்கைகள் பிரபஞ்சத்தின் யதார்த்த நிலையை அறிவுப்பூர்வமாக விளக்குகின்றன.

இதனைப் பௌத்தம் கூறும் 'நெய் விளக்குச் சுடர்' உதாரணத்தின் மூலம் இந்த ஆய்வு துல்லியமாக நிறுவுகிறது. ஒரு விளக்குத் திரி தொடர்ந்து எரிவது போலத் தோன்றினாலும், ஒவ்வொரு கணமும் புதிய நெய்யும் புதிய திரியும் எரிந்து பழைய சுடரை மாற்றிப் புதிய சுடரைத் தோற்றுவித்துக் கொண்டே இருக்கிறது. முந்தைய கணத்தின் சுடரே அடுத்த கணத்தின் சுடருக்குக் காரணமாக அமைகிறது பிரதீத்ய சமுத்பாதம்.

இந்த உதாரணத்தின் வழியே பௌத்தம் உணர்த்தும் மூன்று முக்கியக் கண்டுபிடிப்புகள் இந்த ஆய்வின் மூலம் இறுதி செய்யப்படுகின்றன. மாறும் உலக யதார்த்தம் விளக்குச் சுடரைப் போல இவ்வுலகில் உள்ள அனைத்தும் கணத்திற்கு கணம் மாறக்கூடியவை இங்கு எதுவும் நிரந்தரமில்லை.

விளக்கு என்பது திரி, நெய், நெருப்பு ஆகியவற்றின் தற்காலிகக் கூட்டுச் செயல்பாடே தவிர, அங்கு 'விளக்கு' எனத் தனிப்பொருள் இல்லை. அதுபோலவே, மனிதன் என்பவன் ஐந்து கந்தங்களின் சேர்க்கையே தவிர, நிலையான ஆன்மா என்று தனியாக எதுவுமில்லை. ஒரு விளக்கிலிருந்து மற்றொரு விளக்கு ஏற்றப்படும் போது, முதல் விளக்கின் ஆன்மாவோ உடலோ கடத்தப்படுவதில்லை; மாறாக, அதன் காரணச் சக்தியே அடுத்த விளக்காகத் தொடர்கிறது. இதுவே பௌத்தம் கூறும் ஆன்மாவற்ற மறுபிறவிக் கோட்பாடு ஆகும்.

எனவே, மணிமேகலை பௌத்த சமயத்தைத் தேர்ந்தெடுத்தது என்பது ஏதோ ஒரு மதத்தின் மீதான குருட்டுத்தனமான பற்றோ அல்லது உணர்ச்சிவசப்பட்ட தேர்வோ அல்ல. மாறாக, புறச்சமயங்களின் தத்துவ முரண்பாடுகளைத் தர்க்க ரீதியாக ஆராய்ந்து, 'விளக்குச் சுடர்' போன்ற யதார்த்த நெறியைக் காட்டிய, பசிப்பிணி மருத்துவத்தை முதன்மைப்படுத்திய பௌத்தத்தின் 'அறிவுசார் நடுநிலை வழி' என்பதை இக்கட்டுரை உறுதி செய்கின்றது.

**சான்றெண் விளக்கம்**

[1.] மணிமேகலை, காதை:2, வரிகள்: 64–67

[2.] மணிமேகலை, காதை:27, வரிகள்: 78–79

[3.] மணிமேகலை, காதை:24, வரிகள்: 127–128

[4.] மணிமேகலை, காதை:30, வரிகள்: 190–191

[5.] மணிமேகலை, காதை:30, வரிகள்: 190–191

[6.] மணிமேகலை, காதை:27, வரி: 195

[7.] மணிமேகலை, காதை 6:96-99

[8.] மணிமேகலை, காதை 11:71-72

[9.] மணிமேகலை, காதை 22:135-136

[10.]மணிமேகலை, காதை:27, வரிகள்: 158–159

[11.]மணிமேகலை, காதை:30, வரிகள்: 222–223

[12.]மணிமேகலை, காதை:27, வரிகள்: 210–212

[13.]மணிமேகலை, காதை:22, வரிகள்: 58–60

[14.]மணிமேகலை, காதை:30, வரிகள்: 230–231

[15.]மணிமேகலை, காதை:30, வரிகள்: 220–221

**துணைநூற் பட்டியல்**

[1.] அரங்கராஜன்.ம, பௌத்த தத்துவமும் தமிழ் இலக்கியமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை (2005).

[2.] கந்தசாமி சோ.ந. மணிமேகலையின் காலம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம். சிதம்பரம்(1977)

[3.] ராகுல் சாங்கிருத்யாயன், பௌத்தத் தத்துவ இயல், நியூ செஞ்சுரி ஹவுஸ் (பி) லிட் அம்பத்தூர், சென்னை- 600 050

[4.] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை (மூலமும் உரையும்), உரையாசிரியர்கள்: ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஔவை துரைசாமிப் பிள்ளை, தமிழ்மண் பதிப்பகம், சென்னை(2007).

[5.] நடராஜன் பிரேமா, மணிமேகலையில் பௌத்தம், பாவை பதிப்பகம், சென்னை(2000)

[6.] வேங்கடசாமி, மயிலை சீனி, பௌத்தமும் தமிழும், பூம்புகார் பதிப்பகம், சென்னை(2003).

[7.] Aiyangar, S. Krishnaswami, *Manimekhalai In Its Historical Setting*, London: Luzac & Co. (1928).

[8.] Kandaswamy, S. N., *Buddhism As Disclosed In Manimekalai*, Annamalainagar, Annamalai University (1978).